1975 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: இந்த 72 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்ட பிறகுதான் மேற்கொண்டு அவற்றை விரிவாக்கும் திட்டம் பற்றி ஆலோசிக்க முடியும். தற்போது எந்தக் கோரிக்கையும் வரவில்லை.

திரு. என். மருதாசலம்: இந்தக் குடியிருப்புகளை மற்ற மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: எல்லா மாவட்டங்களிலும் கெஸட் பதிவில்லாத அலுவலர்களுக்கு குடியிருப்புகள் நிறைய கட்டிக்கொடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

3. அறிவிப்புகள்.

(அ) பேரவைத் தலைவரை பதவி நீக்கம் செய்யக் கோரும் தீர்மானம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக்கோரும் தீர்மானம். தீர்மானத்தை நான் பேரவைக்கு படிக்கிறேன்.

"பல காரியங்களில் ஆளும் கட்சியை எப்படியேனும் பாதுகாக்கும் வகையில் உரிமைப் பிரச்சினைகள் தொடர்பாகச் செய்திருக்கும், செய்யத் தவறியிருக்கும் பல்வேறு செயல்களுக்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும் என்று இந்த அவை தீர்மானிக்கிறது".

தீர்மானத்தை கொடுத்து இருக்கும் உறுப்பினர்களின் பெயரைப் படிக்கிறேன்.

திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. ஆர். மாரிமுத்து, திருமதி சத்தியவாணிமுத்து, திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார், க. உரொ. எட்மண்ட், பி. வெங்கடசாமி.

விதி 54 (1)-ன் கீழ் இதற்கு பேரவை அனுமதி அளிக்க வேண்டும். அப்படி அனுமதி அளிப்பதற்கு, இதற்கு 35 உறுப்பினர்கள் ஆதரவு இருக்கவேண்டும். இதற்கு அனுமதி அளிக்கலாம் என்று கருதும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் இருக்கையில் எழுந்து நிற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,